**காலநிலை தணிப்பு நடவடிக்கை ஆதரவு செயற்திட்டம் - 2020**

காலநிலை தணிப்பு நடவடிக்கை ஆதரவு செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 ஏப்ரல் 11 ஆம் திகதிய ரீஎப்0பீ0017 ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் II(அ)(அ) ஆம் பிரிவின் II ஆவது உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் அவதானிப்புக்களும் கருத்துரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், சுற்றாடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. பாதுகாப்பு மற்றும் சமூக நலனிற்காக இலங்கையில் தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் காலநிலை தணிப்பு முகாமைத்துவத்தை மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். மானிய உடன்படிக்கையின் பிரகாரம், ரூபா 315 மில்லியன் இற்குச் சமமான ஐ.அ.டொலர் 1.8 மில்லியன் தொகையான செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 ஏப்ரல் 11 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 பெப்ரவரி 28 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை

பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்கீட்டு குறைபாடுகள் / கணக்காய்வு விடயங்கள் | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் நிதி நிலைமைக் கூற்றில் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட சகல செலவினங்களும் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | 38,110,000 | மேலதிக ஆய்வு மற்றும் செயற்பாடுகளுக்காக நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டம் தொடர்பான சகல செலவினங்களும் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| i. | 2018 ஒக்டோபர் ஆம் திகதிய 63/2018 ஆம் இலக்க | அமைச்சின் முழு நேர உத்தியோகத்தர்க ளை உள்ளடக்கிய | செயற்திட்ட விடயத்தின் ஆளம் தொழில்நுட்ப மற்றும் நிபுணத்துவ தேவையின் அடிப்படையில் | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைச்சரவைக் குறிப்பு மற்றும் 2018 நவம்பர் 14 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம் | வகையில் செயற்திட்ட அலகிற்கு பதவி அணியினர் ஈடுபடுத்தப்பட வேண்டும். எனினும், அமைச்சுக்கு புறம்பான செயற்திட்ட பதவி அணியினர்கள் சேர்க்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அமைச்சில் முழு நேர உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய செயற்திட்ட அலகிற்கு பதவி அணியினர் உள்ளடக்கப்பட வேண்டியமை குறிப்பிடப்பட்ட போதிலும், உலக வங்கியின் தேவையின் பிரகாரம் வெளி நபர்கள் சேர்க்கப்பட்டு உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய செயற்திட்ட முகாமைத்துவ அலகிற்கு அனுப்பப்பட வேண்டும். | |
| ii. | 2019 மார்ச் 15 ஆம் திகதிய நிதி அமைச்சின் 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 09 ஆம் பந்தி மற்றும் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் எம்ஓஎப்ஈ மற்றும் பீடீ/ஈஆர்டீ/2020/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி மற்றும் வெளிநாட்டு மானிய உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலை மற்றும் 02 ஆம் பந்தி. | 2019 மே 03 ஆம் திகதி இந்த செயற்திட்டத்திற்காக குழு நியமித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2020 மே 05 ஆம் திகதி மாத்திரம் குழு கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்ட காலத்தில் செயற்திட்ட செயற்குழு நியமிக்கப்பட்ட போதிலும், உரிய செயற்திட்டத்தின் செயற்திட்ட பணிப்பாளரின் பிரதிநிதி செயற்பாட்டு குழு கூட்டத்தை நடத்துவதற்காக அத்தியவசியமாக இருந்தமையினால் செயற்திட்ட பணிப்பாளராக பொருத்தமான ஒரு உத்தியோகத்தரை நியமிக்கும் வரை உரிய கூட்ட தடவைகள் நடாத்துதல் காலம் தாழ்த்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் தேவைகளின் பிரகாரம் கூட்டம் நடாத்த வேண்டியிருந்ததுடன், செயலாற்றல் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| iii. | நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பாதீட்டு | உரிய ஆண்டிற்காக திருத்தப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த | செயற்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை |

| | | | |
|---|---|---|---|
| அமைச்சின் 2020 பெப்ரவரி 12 ஆம் திகதிய எம்ஓஎப்ஈ மற்றும் பீடீ/ஈஆர்டீ/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை | மதிப்பீட்டு நிதி ஏற்பாடுகள் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்ட வேண்டியிருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்ட தொகை ரூபா 39,225,901 ஆகும். அதன் பிரகாரம் ஆண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் நிதி செயலாற்றல் 39.41 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | ஒதுக்கீடுகள் ரூபா 99,531,000 ஆக இருந்த போதிலும், ஆண்டின் இறுதியின் போது செயற்திட்டத்தின் பிரதான மூன்று கூறுகளை அகற்றுவதற்கு ஏற்பட்டிருந்தது. அதனால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்ட பணம் அண்ணளவாக ரூபா 39,225,901 ஆக இருந்தது. | அடைந்து கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட செயற்பாடுகளின் பௌதீக செயல்முன்னேற்றம்.

| கூறுகள் | செயற்பாடுகள் | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | அடையப்பட்ட செயலாற்றல் | | | |
| | | **சதவீதம்** | **சதவீதம்** | | | |
| 2.2 | செயற்பாடுகள், அறிக்கையிடல் மற்றும் மெய்மெய்யாய்வு முறைமைகள் மற்றும் இலங்கை காபன் பட்டியலுக்காக துறைசார் மட்டத்தின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குதல். | 100 | 20 | மெதுவான செயல் முன்னேற்றம் அவதானிக்கப் பட்டது. | மதியுரை சேவைகளை வழங்குவதற்காக தரப்படுத்தல் நிறுவனம் ஒன்றை தெரிவு செய்யும் கட்டம் வரை தேவையான சகல பெறுகை வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எனினும், அதனை அமுல்படுத்துவதற்காக மதியுரை சேவையை தொடங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், பல்வேறு காரணங்களினால் இந்த மதியுரை சேவைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. அதனால் எதிர்பார்த்த செயல் முன்னேற்றத்தை கைப்பற்ற முடியாதிருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2.2 | செயற்பாடுகள் அறிக்கையிடல் மற்றும் மெய்மெய்யாய்வு முறைமைகள் மற்றும் இலங்கை காபன் பட்டியல்களில் இடல், பரவலாக்குதல் மற்றும் பராமரித்தல். | 100 | 10 | மெதுவான செயல் முன்னேற்றம் அவதானிக்கப் பட்டது. | தரப்படுத்தல் நிறுவனம் ஒன்றை தெரிவு செய்யும் கட்டம் வரை தேவையான பெறுகை நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், மதியுரை சேவைக்காக கோரப்பட்ட நோக்கங்களை மீண்டும் வெளியிடுமாறு பெறுகைக் குழு பரிந்துரை செய்திருந்தது. எனினும் வரையறுக்கப்பட்ட காலத்தில் அதனை நிறைவேற்றுவதற்கு பிரயோக ரீதியில் முடியாதிருந்தமையினால் இந்த மதியுரை சேவைகளை அமுல்படுத்தாதிருக்குமாறு உலக வங்கி ஆலோசனை வழங்கியிருந்தது. இதற்கு உதாரணமாக தற்போது சந்தையில் தயாராகுவதற்காக பங்குதாரர்களின் செயற்பாடுகள் காணப்படுகின்ற நாடுகளுக்காக கட்டியெழுப்புதல் செயற்பாடுத்துதல், அறிக்கையிடல் மற்றும் 02 ஆய்வு மற்றும் பட்டியல் முறைமைகள் இலங்கையில் ஏற்படுத்துவதற்கு உலக வங்கி முன்மொழிந்திருந்ததுடன், உலக வங்கி தீர்மானித்த பிரகாரம் இலங்கையின் தேவைக்காக தயாரிக்கப்பட வேண்டும். | செயற்திட்டத்தில் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| - | செயற்திட்டத்தின் ஒட்டு மொத்த நிதி செயலாற்றல் | 100 | 12.45 | ஒட்டு மொத்த நிதி செயல் முன்னேற்றமும் குறைவான மட்டத்தில் உள்ளது. | செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட காலத்தில் அநேகமான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு காணப்பட்ட ஆண்டு 2020 ஆம் ஆண்டாகும். அதன் பிரகாரம் உரிய செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும், நாட்டில் காணப்பட்ட கொவிட் - 19 தொற்று நோயினால் அந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு அதிக அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்தது. இதனால் மதியுரை சேவைகளை பெற்றுக் கொள்வதற்குரிய சகல செயற்பாடுகளும் திட்டமிடப்பட்ட காலத்தில் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | செயற்திட்டத்தில் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாடற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 திசெம்பர் 29 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட 55 கணனிகளில் முப்பத்தியெட்டு கணனிகள் திட்டமிடப்பட்ட நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன், 2021 ஆகஸ்ட் 05 ஆம் திகதி வரையிலும் மிகுதி பதினேழு கணனிகளும் | இந்த கணனிகளை பகிர்ந்தளிப்பதற்கு முன்னுரிமை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், தரவுகளை வழங்கும் 55 நிறுவனங்களால் வழங்கப்பட்ட தரவினை அடிப்படையாகக் கொண்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. எனினும், பெப்ரவரி இறுதியளவில் தேசிய காலநிலை மாற்ற தரவுகளை பரிமாற்றும் இணையம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் | வளங்களை அவற்றின் நோக்கங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு விரைவாகவும் செயற்திறனாகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தில் வைக்கப்பட்டிருந்தது, எனினும், தொழில்நுட்ப உதவி இன்றி சகல கணனிகளையும் பயன்படுத்த முடியாதிருந்ததுடன், கணக்காய்வு திகதி வரையிலும் விளைவற்று காணப்பட்டது. | உடன்படிக்கை செய்வதற்கும் மற்றும் இந்த முறைமை தொடர்பாக உரிய தரப்பினர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கும் கணிசமான காலம் எடுத்திருந்தது. அதன் பிரகாரம் இனங்காணப்பட்ட 38 நிறுவனங்களுக்கு 2021 ஏப்ரல் 22 ஆம் திகதி வரையில் பகிர்ந்தளிப்பதற்காகவும் மிகுதி 17 கணனிகளை ஒதுக்கப்பட்ட நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அதனால் உடன்படிக்கை செய்யப்பட்டதன் பின்னர் கூடிய விரைவில் அவை பகிர்ந்தளிக்கப்படும் என மேலும் அறியத்தருகின்றோம். | |

## 2.3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| i. | காசேடு ஒழுங்கு முறையாகவும், முறையாகவும் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | காணப்படுகின்ற குறைபாடுகள் சரி செய்யப்படுவதுடன், ஒழுங்கு முறையாக காசேடு பேணிச் செல்லப்படு. | அதன் பிரகாரம் காசேடு பேணிச் செல்லப்பட வேண்டும். |
| ii. | இருப்பு புத்தகம் முறையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | இருப்பு புத்தகத்தில் உரிய துணைப்பாகங்கள் பிரத்தியேக பதிவேடுகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இருப்பு புத்தகம் முறையாக பேணிச் செல்லப்பட வேண்டும். |
| iii. | செயற்திட்டத்திற்குரிய வங்கியினால் நேரடியாக | செயற்திட்டத்தின் மொத்த நிதியீட்டம் அ.டொலர் 03 மில்லியனாக இருந்த போதிலும், அ.டொலர் 1.2 | செயற்திட்டத்தின் உலக வங்கியின் வகிபாகம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட |

| | | | |
|---|---|---|---|
| | நிதியீட்டம் செய்யப்பட்ட அ.டொலர் 1.2 மில்லியனில் நிதி மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மில்லியன் உலக வங்கியின் கீழும், அ.டொலர் 1.8 மில்லியன் தொகை இலங்கை அரசாங்கத்தின் கீழும் பகிர்ந்தளிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பௌதீக விடயங்களை அமுல்படுத்துவதற்குரிய ஆரம்ப ஆய்வு உலக வங்கி உள்ளடக்கத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தமையினால் உலக வங்கியினால் தொடர்ந்து பௌதீக செயல் முன்னேற்றம் நாளது வரையாக்கப்படுவதுடன், கணக்கு நடவடிக்கைளும் பேணிச் செல்லப்படுகின்றது. | வேண்டும். |
| iv. | 2020 ஆம் ஆண்டிற்காக சொத்துக்கள் மெய்மெய்யாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் இறுதியில் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படுகின்ற கால எல்லையாக இருந்தமையினால் பொருள் மெய்மெய்யாய்விற்கு போதியளவான காலம் காணப்படாதிருந்ததுடன், செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கு போதியளவான பதவியணியினரும் காணப்படவில்லை. எனினும் செயற்திட்டம் இறுதிக் கட்டத்தை அடைவதனால் அமைச்சிற்கு சொத்துக்களை கையளிப்பதற்காக குழுவொன்று நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் மெய்மெய்யாய்வு செய்யப்பட வேண்டும். |